# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி – 2020

**“எமது போராட்ட வாழ்வின் உண்மைகளைக் கலை, இலக்கியப் படைப்புகள் தரிசித்து நிற்க வேண்டும்.”**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்-

ஈழத்தமிழினம் தன்னிறைவு கொண்ட தாயகத்தையும், தொன்மையான மொழியையும், தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியங்கள், கலை, பண்பாடுகளையும் கொண்டிருந்த வையகத்தின் மூத்த இனம். இவற்றை எம்மிடமிருந்து பறித்து எம்மினத்தை அழிக்கின்ற கொடுமையான போரை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். அத்தகைய விடுதலைப் போரிலே தங்கள் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களின் தியாகங்களை என்றென்றும் போற்ற வேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும்.

சுவிஸ் நாட்டில் வாழ்ந்து வருகின்ற தமிழ்ச்சிறார்களும் இளையவர்களும் தாய்மொழியினதும் தாயகத்தினதும் மாவீரர்களினதும் சிறப்புகளை அறிந்து கொள்வதற்கும், அவர்களின் பேச்சாற்றலை வளர்த்தெடுக்கவும் ஆண்டுதோறும் தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி நடாத்தப்பெறுகின்றது. இப்போட்டி வழமைபோல் இவ்வாண்டும் பேரிடர்கால நடைமுறைகளை அனுசரித்து நடைபெறும்.

இப்பேச்சுப்போட்டிக்கு வயதுப்பிரிவின் அடிப்படையில் விரும்பிய அனைவரும் விண்ணப்பிக்கலாம். வலய மட்டத்தில் நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டிகள் (5 – 11 வயதுப்பிரிவு) பேர்ண், சூரிச் ஆகிய நகரங்களில் நடைபெறும். 13 வயது தொடக்கம் 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களுக்குமான பேச்சுப்போட்டிகள் நாடுதழுவிய வகையில் நடாத்தப்பெறும்.

**தரப்பட்ட பேச்சுகளில் மாற்றம் செய்தல் அல்லது வேறு பேச்சுகளைப் பேசுதல் ஏற்றுக்கொள்ளப்பெறமாட்டாது.**

21, 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் ஆகிய வயதுப்பிரிவினர் தாமாக அல்லது தங்களுக்கு அறிமுகமானவர்களுடன் இணைந்து பேச்சினைத் தயாரிக்க வேண்டும். **(நேரம்: 7-10 நிமிடங்கள்)**

வலயமட்டப் போட்டிகள் **14.11.2020 சனிக்கிழமை பேர்ண், சூரிச்** நகரங்களில் நடைபெறும். 13, 15, 17, 19, 21, 22 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் ஆகிய வயதுப்பிரிவினருக்கான போட்டி **15.11.2020 ஞாயிற்றுக்கிழமை பேர்ண்** நகரில் நடைபெறும். பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் நினைவுப்பரிசும் வழங்கப்பெறுவதுடன், வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் **27.11.2020 வெள்ளிக்கிழமை** பிறிபேர்க் நகரில் நடைபெறும் தேசிய மாவீரர்நாள் நிகழ்வில் வழங்கப்பெறும்.

பேச்சுப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் தங்கள் வயதுப்பிரிவிற்குரிய பேச்சினைத் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் **www.maaveerarnal.ch** என்ற இணையத்தளத்திலும் **தமிழர் நினைவேந்தல் அகவத்தின் முகநூலிலும்** தமிழ்ப்பள்ளி முதல்வர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

## விண்ணப்ப முடிவு நாள்: 28.10.2020 புதன்கிழமை

போட்டிக் கட்டணம்: 15 CHF பிந்திய விண்ணப்பக் கட்டணம்: 25 CHF

மாணவர்கள் முழுமைப்படுத்தப்பெற்ற விண்ணப்பப் படிவத்தினையும் போட்டிக் கட்டணத்தினையும் வகுப்பாசிரியர் / தமிழ்ப்பள்ளி முதல்வரிடம் வழங்குதல் வேண்டும். போட்டிக்கட்டணம் செலுத்திய பத்திரத்தின் பிரதியினையும், இப்பேச்சுப்போட்டியில் முதன்முறையாகப் பங்குபற்றுபவர்கள் தங்கள் வதிவிட அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் இவ்விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பெறவேண்டிய முகவரி:**

Tamilar Remembrance Foundation – Swiss
Postfach 439
4528 Zuchwil.

**தபாற்கணக்கு இலக்கம்:** 60 - 34553 - 3

**தொடர்புகளுக்கு:** 076 528 71 12, 076 426 27 80, 077 911 89 58

**ம.ப.பா**

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி - 2020

## வயதுப்பிரிவும் பேச்சுகளின் தலைப்புகளும்

1. **5 வயதுப் பிரிவு – தாய்மொழியாம் தமிழ்**
   (01.01.2015 - 31.12.2015 வரையில் பிறந்தோர்)

2. **6 வயதுப் பிரிவு – தாய்மொழிக்கல்வி**
   (01.01.2014 - 31.12.2014 வரையில் பிறந்தோர்)

3. **7 வயதுப் பிரிவு – அறம் வெல்லும்**
   (01.01.2013 - 31.12.2013 வரையில் பிறந்தோர்)

4. **8 வயதுப் பிரிவு – தமிழீழம் எங்கள் தாய்நாடு**
   (01.01.2012 - 31.12.2012 வரையில் பிறந்தோர்)

5. **9 வயதுப் பிரிவு – ஈழத்தமிழர் எதிர்கொண்ட பேரிடர்கள்**
   (01.01.2011 - 31.12.2011 வரையில் பிறந்தோர்)

6. **10 வயதுப் பிரிவு – வீரத்தமிழர்**
   (01.01.2010 - 31.12.2010 வரையில் பிறந்தோர்)

7. **11 வயதுப் பிரிவு – வல்லமை மிகு தலைவர்**
   (01.01.2009 - 31.12.2009 வரையில் பிறந்தோர்)

8. **13 வயதுப் பிரிவு – மறப்போமா மாவீரரே!**
   (01.01.2007 - 31.12.2008 வரையில் பிறந்தோர்)

9. **15 வயதுப் பிரிவு – தாயக மக்களுக்கான வாழ்வாதாரம்**
   (01.01.2005 - 31.12.2006 வரையில் பிறந்தோர்)

10. **17 வயதுப் பிரிவு – இளைய தலைமுறை எழுச்சி கொள்ளட்டும்!**
    (01.01.2003 - 31.12.2004 வரையில் பிறந்தோர்)

11. **19 வயதுப் பிரிவு – தமிழீழ மருத்துவப்பிரிவு**
    (01.01.2001 - 31.12.2002 வரையில் பிறந்தோர்)

12. **21 வயதுப் பிரிவு – வன்பறிப்புச் செய்யப்படும் தமிழர் தாயகம்**
    (01.01.1999 - 31.12.2000 வரையில் பிறந்தோர்)

13. **22 வயதும் அதற்கு மேலும் - தாயக மக்களின் நீதிக்கான போராட்டம்**
    (31.12.1998ம் திகதியும் அதற்கு முன்பும் பிறந்தவர்கள்)